# அதிபர் அறிக்கை

யா/ அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்

பரிசளிப்பு விழா

2016

யா / அளவெட்டி சதானந்தா வித்தியாலயம்
பரிசளிப்பு விழா – 2016

# அதிபர் அறிக்கை

எல்லாம் வல்ல முதல் வணக்கத்துக்குரிய கும்பிழாவளைப் பிள்ளையாரை முதற் கண் பணிந்து, அருகில் இருந்து எம்மைக் காத்து அருள்புரியும் கேணிக்கரை வைரவப்பெருமானின் பாதம் பணிந்து இப்பரிசளிப்புவிழா நன்னாளிலே அதிபர் அறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

இப்பரிசளிப்புவிழாவிற் கலந்து எம்மைப் பெருமைப்படுத்தி மகிழ்விக்கும் தெல்லிப்பளைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் திரு.மாணிக்கம் ஆனந்தகுமார் அவர்களே, அவர்தம் பாரியார் திருமதி.றஜனி ஆனந்தகுமார் அவர்களே, சிறப்பு விருந்தினராக எமது அழைப்பை ஏற்று மகிழ்விக்கும் இப்பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திரு.மு.நடராசா அவர்களே, கௌரவ விருந்தினராக அழைத்தபோது அழைப்பை ஏற்று கௌரவப்படுத்திய முன்னாள் வலிவடக்கு பிரதேசசபை தவிசாளரும்,வடமாகாண கணக்காய்வாளருமான திரு.சோ.சுகிர்தன் அவர்களே, இவ்விழாவிற்கு ஆசியுரை வழங்க வந்திருக்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் திரு.ஆறு.திருமுருகன் அவர்களே, ஞாபகார்த்த உரையாற்ற வந்திருக்கும் இப்பாடசாலையின் பழைய மாணவனும் மகாஜனாக்கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபருமான திரு பொ.சுந்தரலிங்ம் அவர்களே, மற்றும் பழைய மாணவர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, ஓய்வுபெற்ற அதிபர் ,ஆசிரியர்களே, கிராம அலுவர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, மாணவச் செல்வங்களே, ஆசிரியர்களே அனைவருக்கும் இந்நேர வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய விழாவின் பிரதம விருந்தினரும் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப்பணிப்பாளருமான திரு.மா.ஆனந்தகுமார் அவர்கள் தெல்லிப்பழை கோட்ட பாடசாலைகளில் ஒன்றான கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தில் அதிபராகத் தனது கடமையை செவ்வனே சிறப்புற ஆற்றி, புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் உயர்ந்த நிலையை அப்பாடசாலையை அடையச் செய்தவர். தனது சேவையின் சிறப்பால் இன்று கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று தெல்லிப்பழைக் கோட்ட பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் , இணைபாடச் செயற்பாடுகளுக்கும் உறுதுணையாக இருந்து பாடுபட்டு வருகிறார். அவர் எமது பாடசாலையின் பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்ததையிட்டு பாடசாலை சமூகம் பெருமிதம் கொள்கின்றது. அவருடன் இணைந்து இவ்விழாவைச் சிறப்பிக்கும் அவரது பாரியார் திருமதி.றஜனி. ஆனந்தகுமார் அவர்களது வருகையும் எமது மகிழ்ச்சிக்குரியதே.

சிறப்பு விருந்தினராக வருகைதந்த இப்பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திரு.மு.நடராசா அவர்கள் இப்பாடசாலையில் ஆசிரியராக,அதிபராகக் கடமையாற்றி இன்று ஓய்வுநிலையில் எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க வந்தமையிட்டு எமது பாடசாலை சமூகம் மகிழ்வடைகிறது.

தெல்லிப்பழை பிரதேச பாடசாலைகளின் நலனில் அக்கறையோடு செயற்படுபவரும் எமது பாடசாலைக்கு பல்வேறு வழிகளிலும் உதவிவருபவருமான முன்னாள் வலிவடக்கு பிரதேசசபை தவிசாளரும், வடமாகாண கணக்காய்வாளருமான திரு.சோ.சுகிர்தன் எமது அழைப்பிற்கு மதிப்பளித்து இன்று வருகைதந்து சிறப்பித்துள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்கள்.

ஆசியுரை வழங்க வந்திருக்கும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவரும், ஓய்வு பெற்ற அதிபருமான செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள் இன்று எமது விழாவிற்கு ஆசியுரை வழங்க வந்ததையிட்டு மகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடு இப்பாடசாலை இனிவரும் காலங்களில் மேன்மையையும், சிறப்பையும் அடைய வேண்டுமென ஆசிச் செய்தியை வழங்குவதையிட்டு, நன்றியையும் அவரது வருகைக்கு மகிழ்வையும் தெரிவித்துக் கொள்கிறேன். தேவஸ்தானத்தின் பரோபகார செயற்பாடுகளில் எமது பாடசாலை அபிவிருத்திக்கும், வருடந்தோறும் விளையாட்டுப்போட்டி மற்றும் பரிசளிப்புவிழாவிற்கும் நிதி உதவி வழங்குவதற்கும் தலைவரான அவருக்கு பாடசாலை சமூகம் சார்பில் இன்று நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்பாடசாலையின் பழைய மாணவரும் மகாஜனக்கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபருடான திரு.பொ. சுந்தரலிங்கம் அவர்கள் இன்றைய நாளிலே ஞாபகார்த்த உரை நிகழ்த்த முன்வந்தமை மகிழ்வுக்குரியது.

மற்றும் எமது அழைப்பிற்கு மதிப்பளித்து இவ்விழாவிற்கு வருகை தந்து எம்மை மகிழ்வித்து நிற்கும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், ஓய்வு பெற்ற இப்பாடசாலையின் அதிபர் ,ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், மாணவச் செல்வங்கள் மற்றும் அவையில் அமர்ந்திருக்கும் அனைவரையும் இந்நேரம் இருகரம் கூப்பி சிரம்தாழ்த்தி அன்புடன் வரவேற்கின்றேன். இப்பாடசாலையில் 21.03.2013ல் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்ற பின்னர் நடைபெறும் பரிசளிப்பு விழா இதுவாகும். இப்பாடசாலை வரலாறை எடுத்து நோக்கினால் 1927ல் திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு 1930ல் அரச பாடசாலையாகமாற்றப்பட்டு , இன்னும் மூன்று ஆண்டுகளில் 90ஆவது ஆண்டு நிறைவினை எதிர்நோக்கியுள்ளது. புகழ் பூத்த கல்விமான்களையும் கலைஞர்களையும், அறிஞர்களையும் உருவாக்கி, முனனிலையில் திகழ்ந்த இப்பாடசாலை 1990ம் ஆண்டுகளின் பின்னர் நாட்டின் போர்ச்சூழ்நிலைகளால் வீழ்ச்சியடைந்த நிலைக்கு தள்ளப்பட்ட பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும். க.பொ.த.சாதாரணதர வகுப்புக்களைக் கொண்டிருந்த இப்பாடசாலையில் தற்போது தரம் 1- 8வரையான வகுப்புக்களே உள்ளன. இப்பாடசலை தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வேளையில் மீண்டும் பழையநிலையினை அடையவேண்டும் என்பது பேரவாவாக இருந்தாலும் அதனை செயற்படுத்த இப்பாடசாலைசமூகம் ஒத்துழைப்பை நல்கவேண்டும்.

இப்பாடசாலையில் தரம்1-8 வரையான வகுப்புகளில் 50 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றார்கள். தரம்1ல் அனுமதிக்கான மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. இப்பாடசாலைக்கு தரம் 1, தரம் 6 வகுப்புகளுக்கு அனுமதிக்காக வரும் பிள்ளைகள், முதலில் பிரபல பாடசாலைகளில் அனுமதியை எதிர்பார்த்துக் கிடைக்காத நிலையிலேயே இப்பாடசாலையை நாடிவருகின்றார்கள். இவ்வாறு வரும் பிள்ளைகளும் மெல்லக்கற்போராகவும் ,விசேடதேவையுடையவர் களாகவும் காணப்படுகின்றார்கள். உட்படுத்தற்கல்வி என்ற சிந்தனையில் இவர்களைப் பாடசாலையில் அனுமதித்து கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது ,அவர்களது வரவு வீதமும் அவர்களது கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால் கற்பித்தல் செயற்பாடுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகளை சகல மாணவர்களுக்கும் குறித்தகாலத்தில் நிறைவு செய்வது என்பது முடியாத காரியமாகிறது. மாணவர்களின் குடும்ப பொருளாதாரநிலை, குடும்பப் பின்னணி அவர்களின் உடல் உள வளர்ச்சியிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதால், அவர்களது வரவு வீதமும் அவர்களது கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அடிக்கடி நோய்வாய்ப்படுதல் உடல்நிறை குறைவு போன்றவற்றாலும் அவர்களின் கல்வி நாட்டத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. அவர்களை எழுதி வாசிக்கும் ஆற்றலில் மேம்படுத்தி, ,கற்றலில் ஆர்வத்துடன் ஈடுபடுத்தத்தொடங்கும் போது பெற்றோர் மீண்டும் பிரபல பாடசாலைகளில் அனுமதியைப் பெற்று கொண்டு செல்ல முயற்சிக்கின்றார்கள். இந்நிலை தொடருமானால் இப்பாடசாலையில் சிறந்த பெறுறேகளையும், சிறப்பான மாணவர்களையும் எவ்வாறு உருவாக்குது? என்ற வினாவே மேலெழுகிறது. எனினும் இப்பாடசாலையை நாடிவரும் பிள்ளைகளின் கற்றல் திறன்களை வளர்க்க எம்மால் முடிந்தவரை செயலாற்றி வருகின்றோம். அத்தடன் இணைபாடச்செயற்பாடுகளிலும் குடும்பமட்டம், கோட்டமட்டம், வலயமட்டப் போடடிகளிலும் பங்குபற்றச் செய்கின்றோம்.

## தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு விபரம்:

| | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| பரீட்சைக்குதோற்றியோர் | 08 | 10 | 13 |
| 100 புள்ளிக்கு மேல் பெற்றோர் | 02 | - | 01 |
| 70புள்ளிக்கு மேல் பெற்றோர் | 02 | 02 | 04 |

## பாடசாலை ஆளணியினர்:

| | | |
|---|---|---|
| திருமதி.ரோ.தயானந்தன் | அதிபர் | SLPS 2 |
| திரு.சு.முருகமூர்த்தி | உபஅதிபர் | SLTS 1ஆங்கிலப்பயிற்சி |
| திரு.தெ.குணபாலன் | தரம் 1-5 இணைப்பாளர் | SLTS 2ஆரம்பப் பயிற்சி |
| திருமதி.கௌ.நடராசா | தரம் 6-8 இணைப்பாளர் | SLTS 2II விஞ்ஞானப்பயிற்சி |
| திருமதி.ச.ஜீவராசா | ஆசிரியர் | SLTS2II கலைப்பட்டதாரி சிறப்பு |
| திருமதி.ப.கணேசராசா | ஆசிரியர் | SLTS2II இசைக்கலைமானி |
| திருமதி.மே.ஜ.நந்தகுமார் | ஆசிரியர் | SLTS2II ஆரம்பப் பயிற்சி |
| செல்வி.சு.அம்பாலிகை | ஆசிரியர் | SLTS2II தேசியபோதனா கல்வி டிப்னோமா விஞ்ஞானப் பட்டதாரி |
| திருமதி.பி.தர்மபாலன் | ஆசிரியர் | SLTS2II கலைப்பட்டதாரி |
| திருமதி.பா.முகுந்தன் | ஆசிரியர் | SLTS3I வர்த்தக பட்டதாரி |
| திருமதி.றெ.அன்ரனிஸ்ரலின் | ஆசிரியர் | SLTS3I தேசியபோதனா கல்வி டிப்னோமா |
| திருமதிபா.ஜனார்த்தன் | ஆசிரியர் | SLTS2II தேசியபோதனா கல்வி டிப்னோமா |

இவர்கள் தமது துறை சார்ந்த பாடங்களை மட்டும் கற்பிப்பதோடு நின்றுவிடாது பொருத்தமான ஆசிரியர் இல்லாத ஏனைய பாடங்களையும் தம்மால் இயன்றவரை சிறப்பாகக் கற்பித்து வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல் மாணவர் உடல், உள நலம், உடற்சுகாதாரம், வரவுவீதம், நலநோன்பு பாடசாலைச் சுத்தம் என்பவற்றிலும் கவனமெடுத்து செயற்பட்டு வருகின்றார்கள் 50 வரையான மாணவர் எண்ணிக்கையையும் தரம்1-8 வரையான வகுப்புகளையும் கொண்ட பாடசாலை என்ற ரீதியில் இப்பாடசாலையில் கடமையாற்றுவதும் , கற்பிப்பதும் இலகுவானது என்பது சமூகத்தின் பார்வையாக இருப்பினும் இங்கு கல்வி கற்கும் மாணவர்களில் 80% மாணவர்கள் மெல்லக்கற்கும் மாணவர்களாகவும் 10% மாணவர்கள் விசேட தேவையுடையவர்களாகவும் காணப்படுவதும் இங்கு கற்பிப்பதில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு ஒரு சவாலாகவே அமைந்துள்ளது. இவ்வாறு கடமையாற்றும் ஆசிரியர்களின் சேவை சமூகத்திற்கு மிகவும் அவசியமானது. மேலும் இவர்களின் சேவை சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். எமது கணித பாட ஆசிரியர் செல்வி.சு.அம்பாலிகை ஒருவருட கற்கை விடுமுறையில் யாழ்பல்கலைக்கழகத்தில் டிப்ளோமா கற்கை நெறியை தொடர்கிறார். அவர் ஆசிரிய வாண்மை பெற்று மீண்டும் இப்பாடசாலையில் தனது சேவையைத் தொடர எனது வாழ்த்தக்கள்.இப்பாடசாலையில்திருமதி தெ.குணபாலன் ஆசிரியர ஆற்றிய சிறப்பான சேவைக்கு வலிகாமம் கல்விவலய ஆசியர் தினவிழாவில் சிறந்த ஆசிரியர்விருது பெற்றமையும் பெருமையான விடயமாகும். திருமதி.பி.தர்மபாலன், திருமதி.பா.முகுந்தன், திருமதி.கௌ.நடராசா, திருமதி.ப.கணேசராசா, திருமதி.றெ.அன்ரலிஸ்ரலின், திருமதி.சி.ஜீவராசா ஆகியோர் இவ்வருடம் எமது ஆசிரியர் குழாமுடன் இணைந்துள்ளனர். இவர்கள் அனைவரும் மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு அவர்களை சமூகத்தின் நற்பிரைஜைகளாக உருவாக்க இயன்றவரை பாடுபட வேண்டும் என வேண்டுகின்றேன்.

தொண்டராசிரியர்

செல்வி நா.புரவீனா கடந்த மூன்று வருடங்களாக ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முழுமனதோடு உதவி வருகின்றார். மாணவரின் கற்றல் செயற்பாட்டில் மட்டுமல்லாது இணைபாடச் செயற்பாடுகளிலும், சகல வகுப்புக்களினதும் கற்பித்தல் சாதனங்களை கணனியில் வடிவமைத்துக் கொடுப்பதிலும் அக்கறையுடன் செயற்படுபவர். கலைப் பட்டதாரியான இவரது சேவைக்கு பாடசாலை சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதோடு , அவர் வாழ்வில் உயர்நிலையை அடைய வேண்டும் என ஆண்டவனை வேண்டுகின்றேன். .இவருக்கான உதவு தொகையை கடந்தவருடம் திருமதி.சிவக்கொழுந்து, திரு.சரவணமுத்து ஆகியோர் வழங்கியுதவியுள்ளனர்.
தற்போது இப்பாடசாலை ஆசிரியர்களே அதனை வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் விபரம்.

திருமதி .பி .ஜெயபாலரட்ணம்( பயிற்றப்பட்டஆசிரியர் றோமன்கத்தோலிக்கம் )

2013ல் இடமாற்றம் பெற்றுச் சென்ற இவர் பகுதிநேரமாக இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டு றோமன் கத்தோலிக்க பாடத்தைக் கற்பித்ததோடுமட்டுமல்லாது மாணவர்களின் ஒழுக்கம் ,இணைபாடச் செயற்பாடுகளுக்கும் முன்வந்து பாடுபட்டார்.

திருமதி .செந்தில்வாணி .சிவநாதன் (பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆரம்பப்பிரிவு)

இவர் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு அர்ப்பணிப்புடன் கல்வி புகட்டியதோடு நின்று விடாது பாடசாலையுடன் தொடர்புடைய பழைய மாணவர்களையும், நலன்விரும்பிகளையும், உதவி வழங்கியவர்களையும் இணைத்து தற்போது இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக செயற்பட்டு வந்தார்

.திருமதி .குயின்சி .சிவநாதன் (பயிற்சி நடனம்)

இவர் இடைநிலைப் பிரிவு மாணவர்களின் வளர்ச்சிக்கு பகுதிநேரமாக நடனபாடத்தையும், றோமன் கத்தோலிக்க பாடத்தையும் கற்பித்தது மட்டுமல்லாது பாடசாலையின் விழாக்களுக்கும் போட்டிகளுக்கும் நிகழ்விற்கும் மாணவர்களை பயிற்றுவித்து உதவியுள்ளார்.

திரு.இ.விக்கினேஸ்வரன் பயிற்றப்பட்ட ஆசிரியர் ஆரம்பம்

இவர் ஆரம்பப் பிரிவு ஆசிரியராக மாணவர்களுக்கு கற்பிப்பது மட்டுமல்லாமல் கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை வழிப்படுத்தியதோடு, கூடிய மாணவரை 70 புள்ளிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெறச்செய்துள்ளார். வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியையும் சிறப்பாக ஒழுங்கமைத்து நடாத்த உதவியுள்ளார் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் மட்டுமல்லாது இடைவேளை உணவு வழங்கல், இலவச பாடநூல்களைப் பெற்றுக் பொடுத்தல், வரவு ஒழுங்கீன மாணவர்களை பாடசாலையில் இணைப்பதிலும், பாடசாலையில் சுகயீனமுறும் மாணவர்களின் நலன்களிலும் அக்கறையுடனும் செயற்பட்டார்.

திருமதி. சுபாசினி. பாலகுமார் **MA**பட்டதாரி

இவர் இடைநிலைப் பிரிவில் கர்நாடக சங்கீத பாடத்தையும், வரலாறு, புவியியல், குடியுரிமை செய்முறைத் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களையும் கற்பித்ததோடுமட்டுமல்லாது வழிகாட்டல் ஆலோசகராகவும், தரஉள்ளீடு, ESDFP, மாணவர்மன்றம் போன்ற பொறுப்புக்களையும் தரம் 6-8 இணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் கடமையாற்றிய காலத்தில் பாடசாலையின் நிதிச் செயற்பாடுகளையும் பொறுப்பேற்றுச் செவ்வனே நடைமுறைப்படுத்தி உறுதுணையாக இருந்துள்ளார்.

இவர்களோடு திருமதி.ச.கௌரிதரன், திருமதி.பு.தர்மராசா,.திருமதி.ஹேமச்சந்திரன் ஆகியோர் இப்பாடசாலையில் மிகவும் குறுகிய காலம் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளனர்.

இவர்கள் அனைவரும் இப்பாடசாலையில் ஆற்றிய சேவைக்கும், நிர்வாக செயற்பாடுகளுக்கு வழங்கிய ஒத்தழைப்புக்கும் நன்றியைத் தெரிவித்து, சேவையாற்றச் சென்ற இடங்களிலும் சிறப்புற சேவையாற்றி சாதனை படைத்திட வாழ்த்துகிறேன்.

## புதிதாக எம்முடன் கடமையாற்ற இணைந்தோர்.

- திருமதி.பி.தர்மபாலன்... 01.01.2016...............தொடக்கம் ஆரம்பக்கல்வி ஆசிரியர்
- திருமதி.பா.முகுந்தன்...... 01.01.20116............ வணிக பட்டதாரி
- திருமதி.கௌ.நடராசா...... 03.02.2016............ விஞ்ஞானம் விசேடபயிற்றப்பட்ட ஆசிரியர
- திருமதி.ப.கணேசராசா.........18.01.2016............ கர்நாடக சங்கீத ஆசிரியர்
- திருமதி.சி.ஜீவராசா............25.04.2016............ வரலாறு பட்டதாரி
- திருமதி.றெ.அன்ரலிஸ்ரலின்...25.04.2016............ பயிற்றப்பட்ட ஆசிரியர்RC

2016ம் ஆண்டு ஜனவரி முதல் எம்முடன் இணைந்து இவர்கள் இப்பாடசாலை மாணவர்களின் கல்வியிலும் நலனிலும் அக்கறையுடன் செயற்பட்டு இம்மாணவர்களின் எதிர்கால வாழ்வுக்கு தங்களால் இயன்றவரை பாடுபட வேண்டும் என வேண்டுகிறேன்.

## கால்கோல் விழா

வருடந்தோறும் ஜனவரி மாதத்தில் இப்பாடசாலையில் தரம் 1ற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களை வரவேற்கும் இந்நிகழ்வு வருடந்தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந்நிகழ்விற்கான செலவினை அளவெட்டி சுப்பையா.குமாரதாசக் குருக்கள் அவர்கள் தனது தந்தையாரின் ஞாபகார்த்தமாக வழங்கி வருகின்றார். இவ் விழாவிற்கு திருமதி தெ.குணபாலன் ஆசிரியர் பொறுப்பாக செயற்பட்டுவருகின்றார்.

## வழிகாட்டலும் ஆலோசனையும்

எமது மாணவர்களின் உடல் உள தேவைகளையும், குடும்ப பின்னணியையும் அறிந்து அவர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனையை வழங்கி அவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்த இத்துறைக்குப் பொறுப்பாக செயற்பட்ட ஆசிரியை திருமதி.சு.பாலகுமார் அவர்கள் இடமாற்ம் பெற்றுச் சென்றதையிட்டு அவரின் பொறுப்பை திருமதி.பி.தர்மபாலன் ஆசிரியர் ஏற்றுச் சிறப்புற செயற்படுத்தி வருகின்றார்.

## விசேடகல்வி

விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் சாதாரண வகுப்பறைகளில் ஏனைய மாணவர்களுடன் சேர்ந்து கற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, உட்படுத்தற் கல்வி எனும் செயற்பாட்டிற்கமைவாக அவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு திருமதி.M.J.நந்தகுமார் ஆசிரியர் அவர்கள் பொறுப்பாக செயற்பட்டு வருகின்றார். .பாடசாலை நிகழ்வுகள் மட்டுமல்லாது அவர்களுக்கான போட்டிகளிலும் பங்குபற்ற வழிப்படுத்தி வருகிறார்.இவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் வேளைகளில் பரீட்சைத்திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் உதவுகிறார்.

## இடைவேளை உணவு வழங்கல்

உலக உணவுத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் இவ்வுணவு விநியோகத்திற்கு திருமதி.பா.ஜனார்த்தன் ஆசிரியரும், திரு.சு.முருகமூர்த்தி ஆசிரியரும் பொறுப்பாக செயற்பட்டு வருகின்றார். 2015ம் ஆண்டு வரை திருமதி.செ.சுபாஜினி, திருமதி ஈஸ்வரி ஆகிய இரு பெற்றோர்களும் உணவைத் தயாரித்து பாரிமாறியுள்ளார்கள்.தற்போது திருமதி.ஜெ.கீதா அவர்கள் மாணவர்களுக்கான உணவைத் தயாரித்து உதவிவருகின்றார். பெற்றோரான திரு.ச.சிதம்பரநாதன் உணவைத்தயாரிப்பதற்கான மரக்கறிகளைப் பாடசாலைக்குக் கொண்டுவந்து தருகின்றார் இவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். சமையாலாளர்களுக்கு எதுவித கொடுப்பனவும் வழங்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு விழா

வருடந்தோறும் பெப்ரவரி மாதத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது அதற்குப் பொறுப்பாக திருமதி.பா.ஜனார்த்தன் ஆசிரியர் செயற்பட்டு வருகின்றார். இவ் விளையாட்டுப்போட்டிக்கு பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழையமாணவர்கள், துர்க்காதேவி தேவஸ்தானம் என்போர் நிதியுதவி வழங்கி வருகின்றார்கள்.மாணவர்கள் பாடசாலைமட்டம் ,கோட்டமட்டபோட்டிகள், குடும்பமட்டபோட்டிகளில் பங்குபற்றுகின்றார்கள். ஆரம்பப் பிரிவுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் குடும்பமட்டத்தில் பல இடங்களைப் பெற்றுள்ளனர்.

## ஆசிரியர் தினம்

ஆண்டு தோறும் ஆசிரியர்களுக்கு எடுக்கப்படும் இவ்விழா எமது பாடசாலையிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த 2014ம் ஆண்டில் பழையமாணவர் திரு.வை.சுப்பிரமணியமும் 2015ம் ஆண்டு பழையமாணவன் திரு. .நம்பியாரூரன் அவர்களும் மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர்களை கௌரவப்படுத்தியுள்ளனர்..இனிவரும் காலங்களில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை திறம்பட செயற்படுத்தும் ஆசான்களை கொளரவிக்கும் நன்னாளில் பெற்றோர்களும் மாணவர்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் என வேண்டுகின்றேன்.

## மன்றங்கள்

### இந்து மன்றம்

இம் மன்றமானது வருடந்தோறும் நவராத்திரிவிழா, சமயகுரவர் குருபூசைத்தினங்கள், பொங்கல்விழா சித்திரைப்புத்தாண்டு ,ஆடிப்பிறப்பு போன்ற நிகழ்வுகளை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. நவராத்திரி விழாவிற்கு மாணவர்களுக்கு மாலைகட்டுதல், தோரணம்கட்டுதல் ,கோலம் போடுதல் ,நவராத்திரி பாமாலை பாடுதல் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விழாவிற்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் அறக்கட்டளை நிதியம் (லண்டன்) வருடந்தோறும் ரூபா 8000 நிதியுதவி வழங்கி வருகிறது. இம்மன்றச் செயற்பாடுகளுக்கு திருமதி.தெ.குணபாலன் ஆசிரியர் பொறுப்பாக செயற்பட்டு வருகின்றார்.

### மாணவர் மன்றம்

திறமைகளை வெளிப்படுத்தவும் மாணவர்களின் தலைமைத்துவம், பங்கேற்பு, குழுமுயற்சி போன்ற திறன்களை வளர்க்கவும், ஆரம்பப்பிரிவு இடைநிலைப் பிரிவு மன்றங்களுக்கு முறையே திருமதி.பா.முகுந்தன், திருமதி.கௌ.நடராசா ஆகியோர் பொறுப்பாக செயற்பட்டு மாதம் இருமுறை மன்றச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து செயற்படுத்தகின்றார்கள்.

## கட்டாயக் கல்விக் குழு

ஒவ்வொரு பிள்ளையும் 5வயது தொடக்கம் 16வயது வரை தமது கல்வியை தொடரவேண்டும்.அது ஒவ்வொரு பிள்ளையினதும் உரிமை என்பதற்கமைவாக ,இப் பாடசாலையிலும் கட்டாயக் கல்விக்குழு அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகிறது. மாணவர் வரவை ஒழுங்காக்குதல் ,நேரத்திற்கு பாடசாலைக்கு வரச்செய்தல், இடைவிலகலைத் தவிர்த்தல் போன்ற செயற்பாடுகளை அமுலாக்கி வருகின்றது. திருமதி.M.J.நந்தகுமார் ஆசிரியர் இக் குழுவின் பொறுப்பாசிரியராக செயற்பட வரவு டிழுங்கீன பிள்ளைகளின் பெற்றோர் சந்திப்பு வீட்டுத்தரிசிப்பு, என்பவற்றுக்கு திரு.சு. முருகமூர்த்தி ஆசிரியர் உடனிருந்து உதவி வருகிறார். அளவெட்டி மத்தி கிராம அலுவலர் திரு.S.சாரங்கன் ,சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் உதவியுடன் இக்குழு சிறப்பாக செயற்பட்டு வருகிறது. பெற்றோர் சந்திப்புக்களை நடாத்தியும், கிராம அலுவலர்ருடன் தொடர்பு கொண்டும் ,வீட்டுத் தரிசிப்புக்கள் மூலமும் தற்போது மாணவர் வரவு அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதாரக் கழகம்

திருமதி.கௌ.நடராசா.இதற்கு பொறுப்பாக செயற்பட்டு வருகிறார் மாணவர் தனிநபர் சுகாதாரம் பாடசாலைச் சூழல் சுத்தம் என்பன இக்கழகத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. பாடசாலைச் சூழலை சுத்தமாகவும் கவினிலையுடனும் பேணுவதில் ஈடுபட்டு வருகிறது பாடசாலை சுகாதார மேம்பாட்டு சிறப்பாக் காணப்படுகிறுது. மாகாணகல்வி திணைக்களகத்தினால் சுகாதார மேம்பாட்டுக்காக வெள்ளிப்பதக்கம் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் கழகம்

2013ல் ஆசிரியர் கழகம் மீள உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆசிரியரும் மற்றவர் நலனில் அக்கறையோடு செயற்படுவதோடு, அவர்களது குடும்ப நிகழ்வுகளிலும் பங்கெடுத்து வருகின்றார்கள் அத்தோடு இடமாற்றம் பெற்று செல்லும் ஆசிரியர்களுக்கு பிரிவுபசார விழாக்களையும் நெறிப்படுத்தி அவர்களை கௌரவப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், பாடசாலை அபிவிருத்திக்குழுவும்

இப்பாடசாலையில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் பெற்றோர்கள், ஆசிரியர்கள், அங்கத்தவர்களாகவும், பாடசாலை அபிவிருத்திக்குழு பெற்றோர், ஆசிரியர் ,பழையமாணவரகள், வலயப்பிரதிநிதிகள் என்போரைக் கொண்டதாகவும் இயங்கிவருகின்றது. எனினும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலையின் அபிவிருத்தியிலும் ,பாடசாலைக்கு மாணவர்களை இணைப்பதிலும் ,பௌதீக வளங்களை புனரமைப்புச் செய்வதிலும் ,பௌதீக வளப்பற்றாக்குறை நீக்குவதிலும் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் வேண்டுகின்றேன்.

## பழைய மாணவர் சங்கம்

பல ஆண்டுகாலமாக இயங்காத பழைய மாணவர் சங்கம் 2013ம் ஆண்டில் இருந்து மீள இயங்க ஆரம்பித்து தற்போது சிறப்பாக இயங்கி வருகிறது. இதில் பல தற்போது பழையமாணவர்கள் அங்கத்தவர்களாக இணைக்கப்பட்டுள்ளார்கள். இப் பாடசாலையில் கடமையேற்றபின்னர் திரு.வை.சுப்பிரமணியம் திரு. .நம்பியாரூரன் ஆகியோரை அணுகியபோது அவர்கள் தமது பாடசாலை மீது கொண்ட பற்றினாலும் பாடசாலையின் தற்போதைய நிலையையும் மனதில் இருத்தி ,இச் சங்கத்தை மீள இயக்க அரும்பாடுபட்டனர். அவர்களின் முயற்சியின் பயனால் பல பழையமாணவர்கள் இணைக்கப்பட்டு பாடசாலைக்கு நிதியும் கிடைக்கப்பெற்றது. இச்சங்கத்தினர் வருடந்தோறும் விளையாட்டுப் போட்டிச் செலவுக்காக ரூபா100 000 ஐ நிரந்தர வைப்பிலிட்டு உதவியுள்ளனர்..இவ்வாறே பரிசளிப்பு விழாவிற்கும் ஒரு நிதியை திரட்ட இச்சங்கம் முனைப்புடன் செயற்படுகிறது. கடந்த மூன்று வருடங்களாக விளையாட்டுப் போட்டிக்குரிய செலவிற்கும் பெருமளவு நிதியுதவியை வழங்கி உதவியுள்ளனர். இன்றைய பரிசளிப்பு விழாவிற்கும் நிதியை வழங்கி இவ்விழாவை சிறப்புற நடாத்த உதவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இனிவரும் ஆண்டுகளில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் முன்பள்ளியொன்றை இப்பாடசாலையில் ஆரம்பிப்பதும், அடுத்த ஆண்டில் இருந்து தரம் 1ல் புதிதாக சேரும் மாணவர்களுக்கு அவர்களின் குடும்ப நிலையையும், உயர்கல்வியையும் கருத்தில் கொண்டு ஒவ்வொரு பிள்ளைக்கும் குறைந்தது ரூ 5000 ஐ ஆவது வைப்பிலிட்டு உதவவும் எண்ணியுள்ளனர். இப் பழையமாணவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். இப் பழைய மாணவர் சங்கத்திற்கு நிதி மூலங்களைக் கண்டறிந்து பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் திரு. .நம்பியாரூரன் அவர்களுக்கு பாடசாலை சமூகம் என்றும் நன்றியுடையது.இச்சங்கத்தின் பொருளாளராக திரு.முருகமூர்த்தி ஆசிரியர் பொறுப்புடன் செயற்பட்டு வருகிறார். இனிவரும் காலங்களில் இச்சங்கம் மேலும் வளர்ச்சி பெற்று பாடசாலையின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பை நல்கவேண்டும் என இச் சந்தர்ப்பத்தில் வேண்டி நிற்கின்றேன்.

## இப் பாடசாலையில் மேற்கொள்ளப்பட வேலைகள்

- ❖ பாடசாலை ‘ப’வடிவ கட்டிடம் வர்ணம் பூசப்பட்டமை - 2013 SDMG வேலைத்திட்ம்
- ❖ மாணவர் மலசலகூட திருத்தப்பட்டமை - 2013 SDMG வேலைத்திட்ம்
- ❖ பின்புறக் கட்டிடம் திருத்தப்பட்டு பாதுகாப்பு கிறில் அமைக்கப்பட்டமை - வலயநிதி 2014
- ❖ மாணவர்களது சலகூடதொகுதிக்கு மாபிள் பதிக்கப்பட்டமை -வலயநிதி 2015
- ❖ முன்புறம் வீதியோர மதில் அமைக்கப்பட உள்ளமை (நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. - கௌரவ மாவை.சேனாதிராசா பாராளுமன்ற உறுப்பினர் நிதி

## நிறைவேற்றப்பட வேண்டிய பௌதீக வளத் தேவைகள்

- ♦ பருவ மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்பதால் பாடசாலை நிலத்திற்கு மண்போட்டு உயர்த்துதல்
- ♦ ஆரம்பகால ‘ப’ வடிவ கட்டிடம் சுவர்களினூடு கறையான் ஏறி மேலே கூரையும் பாதிப்படைவதால் புதிய கட்டிடம் ஒன்று அமைக்க வேண்டியது அவசியம்.
- ♦ ஆசிரியர்களுக்கான மலசலகூடம்
- ♦ தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவுக்கான நிதி
- ♦ சமையலாளருக்கான கொடுப்பனவுக்கான நிதி
- ♦ ஆசிரியர் மேசைகள் கதிரைகள்
- ♦ வகுப்பறை அலுமாரிகள்
- ♦ கணனித் தொகுதிகள்
- ♦ தொலைக்காட்சி

## நன்றியும் நிறைவும்

இன்றைய விழாவின் பிரதமவிருந்தினராக வருகை தந்து சிறப்பித்த எமது தெல்லிப்பழைக் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு.மா.ஆனந்தகுமார் அவர்களும், அவருடன் இணைந்து இவ்விழாவை சிறப்பித்த திருமதி.ரஜனி ஆனந்தகுமார் அவர்களும் ,எதுவிதமறுப்புமின்றி எமது அழைப்புக்கு மதிப்பளித்து இதுவரைநேரமும் இருந்து சிறப்பித்து பரிசில்களையும் வழங்கி கௌரவித்தமைக்கு இப்பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து சிறப்புவிருந்தினராக வருகைதந்து சிறப்பித்து இப்பாடசாலைக்கு பெருமைசேர்த்த ஓய்வு பெற்ற அதிபர் திரு.மு.நடராசா அவர்களுக்கும் இப்பாடசாலை சமூகம சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். எமது பாடசாலை தேவைகளைக் கேட்டு, உதவிகளை சகல வழிகளிலும் புரியும், முன்புற மதில் கட்டுவதற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா அவர்களின் மூலம் இப் பாடசாலைகளுக்க நிதி ஒதுக்கீட்டினை மேற்கொள்ள உறுதுணையாக இருந்த தவிசாளர திரு. சோ. சுகிர்தன் அவர்கட்கும், கௌரவ பாரளுமன்ற உறுப்பினருக்கும் எமது பாடசாலை சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று இப்பரிசளிப்புவிழா நாளிலே நினைவுப் பேருரை வழங்கிய எமது பழைய மாணவனும் ஓய்வுபெற்ற மகாஜனக்கல்லூரி அதிபருமான திரு.பொ.சுந்தரலிங்கம் அவர்களுக்கு பாடசாலை சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைய விழாவுக்கு ஆசியுரை வழங்க அவரை அணுகிய போது, எமக்கு மதிப்பளித்து, நேரத்தை ஒதுக்கி இன்று வந்து ஆசியுரை வழங்கி அமர்ந்ததோடு, பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி ,பரிசளிப்புவிழா என்பவற்றிக்கும், அபிவிருத்திக்கும் தனது தேவஸ்தானத்தின் மூலம் நிதியுதவிவழங்கி உதவிவருவதற்கும் பாடசாலை சமூகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது பாடசாலையின் மாணவர்களின் கற்றல்நடவடிக்கைகளுக்கு உதவும் முகமாக ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கியும், பாடசாலையின் பௌதீக வளத்தேவைகளை இணங்கண்டு நிதி ஒதுக்கீடு செய்தும், பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் எமது வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.செ.சந்திரராஜா அவர்களுக்கும் இப்பாடசாலையின் பழையமாணவனும் வலிகாம வலய பிரதிக்கல்விப்பணிப்பாளருமான திரு.ஆ.இளங்கோ அவர்களுக்கும், ஓய்வுபெற்ற தெல்லிப்பழைக்கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு.அ.ஈஸ்வரநாதன் அவர்களுக்கும் இன்றைய கோட்டக்கல்விப் பணிப்பாளரும் பிரதமவிருந்தினருமான திரு.மா.ஆனந்தகுமார் அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் பாடசாலை சமூகம் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்விழாவிற்கு பெருமளவு நிதியுதவி வழங்கிதோடு பாடசாலை நலனிலும் அக்கறையோடு செயற்படும் பழையமாணவரின் செயற்பாட்டிற்கும் நன்றியைத் தெரிவித்து கொள்கின்றேன்.

இன்றைய விழா சிறப்புற அமையவும் நிகழ்ச்சிகள் மூலம் எம்மை மகிழ்வடையவும் வழிசமைத்த ஆசிரியர்களுக்கம், மாணவர்களுக்கம், பெற்றோர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.இவ் விழாவிற்கு பெருமளவு நிதி உதவி வழங்கிய அனைவருக்கும் பாடசாலை சமூகம் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அதிபர் அறிக்கையை வடிவமைத்து உதவிய செல்வி நா.புரவீனா அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் மற்றும் விழாவிற்கு உதவிய அனைத்து உள்ளங்களிற்கும், வருகைதந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.



# யா/சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி

## பரிசளிப்பு விழா-2016

## 2015ல் பரிசு பெறுவோர் விபரம்

| தரம் | பெயர் | பாடங்கள் | வகுப்பு நிலை |
|---|---|---|---|
| 1 | ச.சாதுரிஜன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் - 1ம் இடம் | முதலாம் இடம் |
| | கு.துவாரகா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் - 2ம் இடம் | இரண்டாம் இடம் |
| | செ.லிபின்சிகா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் - 3ம் இடம் | மூன்றாம் இடம் |
| | | | |
| 2 | பி.சதுர்ஜன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம் - 1ம் இடம் | முதலாம் இடம் |
| | இ.பிரதீபன் | கணிதம்,சுற்றாடல் - 2ம் இடம் | |
| | | தமிழ், சமயம் - 3ம் இடம் | இரண்டாம் இடம் |
| | ர.காந்தரூபன் | தமிழ், சமயம் - 2ம் இடம் | |
| | | கணிதம்,சுற்றாடல் - 3ம் இடம் | மூன்றாம் இடம் |
| | | | |
| 3 | கு.லேசினி | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம்,ஆங்கிலம் - 1ம் இடம் | முதலாம் இடம் |
| | ப.சாருஜன் | தமிழ்,கணிதம், சமயம் - 2ம் இடம் | |
| | | சுற்றாடல்,ஆங்கிலம் - 3ம் இடம் | இரண்டாம் இடம் |
| | நி.வின்சன் | ஆங்கிலம் - 2ம் இடம் | |
| | | தமிழ்,கணிதம், சமயம் -3ம் இடம் | மூன்றாம் இடம் |
| | ஜெ.சானுஜன் | சுற்றாடல் - 3ம் இடம் | |
| | | | |
| 4 | சி.யக்ஷான் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம்,ஆங்கிலம் - 1ம் இடம் | முதலாம் இடம் |
| | ச.மதுசன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,,ஆங்கிலம் - 2ம் இடம் | |
| | | சமயம் -3ம் இடம் | இரண்டாம் இடம் |
| | இ.லக்சகாந் | சமயம் -2ம் இடம் | |
| | | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,,ஆங்கிலம் -3ம் இடம் | மூன்றாம் இடம் |
| | ற.சியானா | ஆங்கிலம் -3ம் இடம் | |
| | | | |
| | | | |

# யா/சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி

## பரிசளிப்பு விழா-2016

## 2015ல் பரிசு பெறுவோர் விபரம்

| தரம் | பெயர் | பாடங்கள் | வகுப்பு நிலை |
|---|---|---|---|
| 5 | ர.விஜிதா | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம்,ஆங்கிலம் - 1ம் இடம் | முதலாம் இடம் |
| | கு.டனோசன் | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம், - 2ம் இடம் | |
| | | ஆங்கிலம் - 3ம் இடம் | இரண்டாம் இடம் |
| | செ.தர்சிகன் | ஆங்கிலம் - 2ம் இடம் | |
| | | தமிழ்,கணிதம்,சுற்றாடல்,சமயம், - 3ம் இடம் | மூன்றாம் இடம் |
| | | | |
| 6 | து.சானுஜன் | சுமயம்,விஞ்ஞானம்,ஆங்கிலம்,வரலாறு,சுகாதாரம், செய்முறைத் தொழில்நுட்பம் -1ம் இடம் | முதலாம் இடம் |
| | | தமிழ்,கணிதம்,புவியியல் -2ம் இடம் | |
| | ற.ராகுலன் | தமிழ்,கணிதம்,சங்கீதம் -1ம் இடம் | இரண்டாம் இடம் |
| | | சுமயம்,விஞ்ஞானம்,ஆங்கிலம்,வரலாறு,சுகாதாரம், -3ம் இடம் | |
| | சு.யதுர்சன் | வரலாறு -2ம் இடம் | மூன்றாம் இடம் |
| | | புவியியல்,ஆங்கிலம்,வரலாறு,சுகாதாரம்,சங்கீதம், செயன்முறைத் தொழில்நுட்பம் -3ம் இடம் | |
| | கி.யதுசன் | புவியியல், சங்கீதம் -1ம் இடம் | |
| | | செயன்முறைத் தொழில்நுட்பம் -2ம் இடம் | |
| | | | |
| 7 | யே.யசித் | தமிழ்,கணிதம், விஞ்ஞானம்,ஆங்கிலம்,வரலாறு,சுகாதாரம், செய்முறைத் தொழில்நுட்பம் -1ம் இடம் | முதலாம் இடம் |
| | | சமயம்,புவியியல், சங்கீதம் 2ம் இடம் | |
| | செ.ஜென்சிகா | சமயம்,புவியியல், சங்கீதம் 1ம் இடம் | இரண்டாம் இடம் |
| | | தமிழ்,கணிதம், விஞ்ஞானம்,ஆங்கிலம்,வரலாறு,சுகாதாரம், செய்முறைத் தொழில்நுட்பம் -2ம் இடம் | |
| | ர.அனுசா | தமிழ்,கணிதம், விஞ்ஞானம்,ஆங்கிலம்,வரலாறு,சுகாதாரம், செய்முறைத் தொழில்நுட்பம் -3ம் இடம் | மூன்றாம் இடம் |
| | | | |
| | | | |

# யா/சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி

## பரிசளிப்பு விழா-2016

## 2015ல் பரிசு பெறுவோர் விபரம்

| தரம் | பெயர் | பாடங்கள் | வகுப்பு நிலை |
|---|---|---|---|
| 8 | ஆ.கஜீபன் | தமிழ்,கணிதம், சங்கீதம், செய்முறைத் தொழில்நுட்பம், ஆங்கிலம் - 1ம் இடம் | முதலாம் இடம் |
| | | விஞ்ஞானம்,சமயம், புவியியல், வரலாறு, சுகாதாரம் - 2ம் இடம் | |
| | ர.சம்பத்குமார் | விஞ்ஞானம்,சமயம், புவியியல், வரலாறு, சுகாதாரம் - 1ம் இடம் | இரண்டாம் இடம் |
| | | தமிழ்,கணிதம், செய்முறைத் தொழில்நுட்பம், - 2ம் இடம் | |
| | ச.டனுசிகா | ஆங்கிலம் , சங்கீதம் 2ம் இடம் | மூன்றாம் இடம் |
| | | தமிழ்,கணிதம், சங்கீதம், செய்முறைத் தொழில்நுட்பம், ஆங்கிலம் - 3ம் இடம் | |
| | இ.வகசன் | ஆங்கிலம் -3ம் இடம் | |
| | | | |
| | | | |

# யா/சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி
## பரிசளிப்பு விழா – 2016
### ஆரம்பப் பிரிவுப்போட்டிகள்-2015ல் பரிசு பெறுவோர் விபரம்

| தரம் | போட்டிகள் | பாடசாலை மட்டம் | குடும்பமட்டம்(பங்குபற்றியோர்) |
|---|---|---|---|
| 1 | சித்திரம் | ச.சாதுரியன் 1ம் இடம் | ச.சாதுரியன் |
| | | ர.ரஜிந்தன் 2ம் இடம் | |
| | | கு.துவாரகா 3ம் இடம் | |
| | | | |
| 2 | சித்திரம் | ர.காந்தரூபன் 1ம் இடம் | ர.காந்தரூபன் |
| | | இ.பிரதீபன் 2ம் இடம் | |
| | | பி.சதுர்ஜன் 3ம் இடம் | |
| | | | |
| 3 | சித்திரம் | கு.லேசினி 1ம் இடம் | கு.லேசினி |
| | | நி.வின்சன் 2ம் இடம் | |
| | | ஜெ.சனூஜன் 3ம் இடம் | |
| | | | |
| 4 | சித்திரம் | சு.அபியூத் 1ம் இடம் | சு.அபியூத் |
| | | ச.மதுசன் 2ம் இடம் | |
| | | இ.லக்சகாந் 3ம் இடம் | |
| | | | |
| 5 | சித்திரம் | கு.டனோசன் 1ம் இடம் | கு.டனோசன் |
| | | ச.சாரங்கா 2ம் இடம் | |
| | | லே.ஓகஸ்ரீன் 3ம் இடம் | |
| | | | |
| 1 | திருக்குறள் | ச.சாதுரியன் 1ம் இடம் | ச.சாதுரியன் |
| | | செ.லிபின்சிகா 2ம் இடம் | |
| | | கு.துவாரகா 3ம் இடம் | |
| | | | |
| 2 | திருக்குறள் | சு.யஸ்மினா 1ம் இடம் | சு.யஸ்மினா 4ம்இடம் |
| | | இ.பிரதீபன் 2ம் இடம் | |
| | | பி.சதுர்ஜன் 3ம் இடம் | |
| | | | |
| 3 | திருக்குறள் | கு.லேசினி 1ம் இடம் | கு.லேசினி 4ம்இடம் |
| | | ப.சாருஜன் 2ம் இடம் | |
| | | நி.வின்சன் 3ம் இடம் | |
| | | | |
| 4 | திருக்குறள் | சி.யக்சான் 1ம் இடம் | சி.யக்சான் |
| | | இ.லக்சகாந் 2ம் இடம் | |
| | | ச.சஞ்சிகா 3ம் இடம் | |
| | | | |
| 5 | திருக்குறள் | ர.விஜிதா 1ம் இடம் | ர.விஜிதா |
| | | செ.தர்சிகன் 2ம் இடம் | |
| | | கு.டனோசன் 3ம் இடம் | |
| | | | |
| 2 | கணிதத்திறன் விருத்தி | இ.பிரதீபன் | இ.பிரதீபன் |
| | | ர.காந்தரூபன் | ர.காந்தரூபன் |
| | | பி.சதுர்ஜன் | பி.சதுர்ஜன் |
| | | சு.யஸ்மினா | சு.யஸ்மினா |
| | | | |
| 3 | கணிதத்திறன் விருத்தி | கு.லேசினி | கு.லேசினி |
| | | ப.சாருஜன் | ப.சாருஜன் |
| | | நி.வின்சன் | நி.வின்சன் |

# யா/சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி
# பரிசளிப்பு விழா – 2016
## ஆரம்பப் பிரிவுப்போட்டிகள்-2015ல் பரிசு பெறுவோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 4 | கணிதத்திறன் விருத்தி | சி.யக்சான் | சி.யக்சான் |
| | | ச.மதுசன் | ச.மதுசன் |
| | | இ.லக்சகாந் | இ.லக்சகாந் |
| | | ர.சியானா | ர.சியானா |
| | | ச.சஞ்சிகா | ச.சஞ்சிகா |
| | | | |
| 5 | கணிதத்திறன் விருத்தி | ர.விஜிதா | ர.விஜிதா |
| | | செ.தர்சிகன் | செ.தர்சிகன் |
| | | கு.டனோசன் | கு.டனோசன் |
| | | ச.சாரங்கா | ச.சாரங்கா |
| | | செ.கர்சிகா | செ.கர்சிகா |
| | | | |
| 5 | பொதுஅறிவு | ர.விஜிதா | ர.விஜிதா |
| | | செ.தர்சிகன் | செ.தர்சிகன் |
| | | ச.சாரங்கா | ச.சாரங்கா |
| | | இ.லதுசாயினி | இ.லதுசாயினி |
| | | வே.ஓகஸ்ரீன் | வே.ஓகஸ்ரீன் |

## 2015ல் 90%த்திற்கு மேற்பட்ட மாணவர்களின் வரவு வீதம்

தரம்1
செ.லிபின்சிகா 90%
தரம்2
பி.சதுர்ஜன் 91%
தரம்5
ர.விஜிதா 96%
தரம்6
து.சானுஜன் 94%
தரம்7
ஜே.யசித் 91%
ர.அனுசா 90%
தரம்8
சி.டனுசிகா 97%
ஆ.கஜீபன் 90%

## புலமைப்பரிசில் பரீட்சை-2015

**100 புள்ளிக்கு மேல் பெற்றவர்**
செல்வி .ர.விஜிதா
**70 புள்ளிக்கு மேல் பெற்றவர்கள்**
செல்வன். கு.டனோசன்
செல்வன்.செ.தர்சிகன்
செல்வி.செ.கர்சிகா
செல்வி.ச.சாரங்கா

# யா/அளவெட்டி சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி

## பரிசளிப்பு விழா -2016

## ஆங்கிலதினப் போட்டிகள்-2015ல் பரிசு பெறுவோர் விபரம்

| தரம் | மாணவர் பெயர் | போட்டிகள் | பாடசாலை மட்டம் | கோட்ட மட்டம் |
|---|---|---|---|---|
| 4 | சி.யக்ஷான் | Recitation | 1ம் இடம் | சி.யக்ஷான் |
| | ச.சஞ்சிகா | Recitation,<br>Copy writing | 2ம் இடம் | |
| | ந.சியானா | Recitation | 3ம் இடம் | ந.சியானா |
| | ச.மதுசன் | Copy writing | 1ம் இடம் | |
| | இ.லக்சகாந் | Copy writing | 3ம் இடம் | |
| 5 | ச.சாரங்கா | Copy writing | 1ம் இடம் | ச.சாரங்கா |
| | ர.விஜிதா | Copy writing<br>Recitation | 2ம் இடம்<br>1ம் இடம் | ர.விஜிதா |
| | வே.ஓகஸ்ரீன் | Copy writing | 3ம் இடம் | |
| | கு.டனோசன் | Recitation | 2ம் இடம் | |
| | இ.லதுசாயினி | Recitation | 3ம் இடம் | |
| 6 | கி.யதுசன் | Copy writing | 1ம் இடம் | கி.யதுசன் |
| | ந.நாகுலன் | Copy writing<br>Dictation | 2ம் இடம்<br>2ம் இடம் | |
| | து.சானுஜன் | Copy writing<br>Dictation | 3ம் இடம்<br>1ம் இடம் | து.சானுஜன் |
| | சு.சொப்னா | Dictation<br>Recitation | 3ம் இடம்<br>2ம் இடம் | |
| | சு.யதுர்சன் | Recitation | 1ம் இடம் | சு.யதுர்சன் |
| 7 | யே.யசித் | Dictation<br>Copy writing<br>Recitation | 1ம் இடம்<br>2ம் இடம்<br>2ம் இடம் | யே.யசித் |
| | செ.ஜென்சிகா | Dictation<br>Copy writing<br>Recitation | 2ம் இடம்<br>1ம் இடம்<br>1ம் இடம் | செ.ஜென்சிகா |
| | உ.வீனீசன் | Dictation | 3ம் இடம் | |
| | ர.அனுசா | Copy writing | 3ம் இடம் | |
| 8 | ஆ.கஜீபன் | Dictation<br>Copywriting | 1ம் இடம்<br>3ம் இடம் | ஆ.கஜீபன் |
| | சு.சம்பத்குமார் | Dictation<br>Copywriting | 2ம் இடம்<br>2ம் இடம் | |
| | சி.டனுசிகா | Dictation<br>Copywriting | 3ம் இடம்<br>1ம் இடம் | சி.டனுசிகா |

# யா/சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி
## நிதியுதவி வழங்கியோர் விபரம்

| இல | வரவு விபரம் | காசு |
|---|---|---|
| 01 | திரு.ச.சிவநேசன் | 1000.00 |
| 02 | திரு.தெ.கணேசமூர்த்தி | 500.00 |
| 03 | திரு.க.சிவசிதம்பரம் | 500.00 |
| 04 | திருமதி.நா.மாலா | 1000.00 |
| 05 | திருமதி.ம.கௌசலாதேவி | 1000.00 |
| 06 | திரு.க.அருளம்பலம் | 500.00 |
| 07 | திரு.வ.க.நடராசா | 500.00 |
| 08 | திரு.வை.பாலகிருஸ்னன் | 500.00 |
| 09 | திரு.செ.இராஜகுலேந்திரன் | 500.00 |
| 10 | திரு.பொ.சிவனேசன் | 1000.00 |
| 11 | திரு.க.கிருஷ்ணதாசன் | 500.00 |
| 12 | திரு.செ.நம்பியாரூரன் | 500.00 |
| 13 | திருமதி.வீ.அன்னலட்சுமி | 500.00 |
| 14 | திரு.இ.சபாபதிப்பிள்ளை | 500.00 |
| 15 | திருமதி.வி.கந்தையா | 500.00 |
| 16 | துர்க்காதேவி தேவஸ்தானம் | 10,000.00 |
| 17 | திரு.செ.பிரதீபன் | 1000.00 |
| 18 | திருமதி.தி.உதயகுமாரன் | 1000.00 |
| 19 | திரு.வெ.சிதம்பரநாதன் | 1000.00 |
| 20 | திருமதி.யே.அருள்நாயகபூசனி | 1000.00 |
| 21 | துர்க்காதேவி தேவஸ்தானம் | 3000.00 |
| 22 | திரு.சி.இரத்தினசிங்கம் | 500.00 |
| 23 | திரு.க.சிவஞானம் | 500.00 |
| 24 | திரு.மு.செல்லையா | 500.00 |
| 25 | திரு.பொ.கணபதிப்பிள்ளை | 500.00 |
| 26 | திரு.ப.ஆறுப்பிள்ளை | 500.00 |
| 27 | ஸ்ரீமுருகன் களஞ்சியம் | 300.00 |
| 28 | திரு.செ.நம்பியாரூரன் | 500.00 |
| 29 | திரு.இ.மகாலிங்கக் குருக்கள் | 1000.00 |
| 30 | திரு.ந.வல்லவன் | 1000.00 |
| 31 | திருமதி.ம.கௌசலாதேவி | 2000.00 |
| 32 | திரு.ச.பிரபாகரன் | 2000.00 |
| 33 | திரு.வை.பாலசுப்பிரமணியம் | 500.00 |
| 34 | திரு.கு.கந்தையா | 1000.00 |
| 35 | திருமதி.ச.கணேஷாயினி | 2000.00 |
| 36 | திருமதி.S.விக்கினேஸ்வரி | 1000.00 |
| 37 | திரு.நா.முருகையா | 1000.00 |
| 38 | திருமதி.நா.பத்மராணி | 2000.00 |
| 39 | திரு.செ.இராசகுலேந்திரன் | 500.00 |
| 40 | திரு.சு.விஸ்வலிங்கம் | 500.00 |
| 41 | திரு.நா.மகேஸ்வரன் | 500.00 |
| 42 | திரு.செ.கந்தசாமி | 500.00 |
| 43 | திருமதி.சே.ராஜேஸ்வரி | 500.00 |
| 44 | திரு.P.குமரேசன் | 30,000.00 |
| 45 | திரு.இ.ஸ்ரீகுசன் | 5000.00 |
| 46 | திருமதி.க.கந்தநாயகி | 500.00 |
| 47 | திரு.மு.சுந்தரலிங்கம் | 1000.00 |
| 48 | திரு.சி.பேரின்பநாயகம் | 5000.00 |
| 49 | திரு.க.ஞானகணேசர் | 25,000.00 |
| 50 | திரு.ச.சிவனேஸ்வரன் | 5000.00 |
| 51 | திருமதி.ம.கோசலாதேவி | 10,000.00 |
| 52 | திரு.ஆ.சேனாதிராசா | 25,000.00 |
| 53 | திரு.பி.குமரேசன் | 10,000.00 |
| 54 | திரு.பொ.கணேஸ்வரன் | 1000.00 |
| 55 | திரு.நா.கணேஸ்வரன் | 1000.00 |
| 56 | திரு.தி.மனோகரன் | 1000.00 |
| 57 | திரு.V.K.நடராசா | 500.00 |
| 58 | திரு.வ.க.கிருஷ்ணதாசன் | 2000.00 |
| 59 | திரு.நா.மகேஸ்வரன் | 1000.00 |
| 60 | திரு.பொ.சுந்தரலிங்கம் | 2000.00 |
| 61 | திரு.ம.மகாலிங்கம் | 1000.00 |
| 62 | திரு.பொ.பரமேஸ்வரன் | 2000.00 |
| 63 | திருமதி.செ.தெய்வநாயகி | 1000.00 |
| 64 | திருமதி.சு.உருக்குமணிதேவி | 500.00 |
| 65 | திருமதி.ம.சகுந்தலாதேவி | 1000.00 |
| 66 | திரு.இ.மகாலிங்கக் குருக்கள் | 2000.00 |
| 67 | திரு.பொ.சிவநேசன் | 2500.00 |
| 68 | திருமதி.ச.விக்னேஸ்வரி | 1000.00 |
| 69 | திருமதி.இ.சிவக்கொழுந்து | 5000.00 |
| 70 | திரு.ச.பவளம்மா | 4000.00 |
| 71 | திரு.பொ.பொன்னுத்துரை | 5000.00 |
| 72 | திரு.பொ.சுந்தரலிங்கம் | 5000.00 |
| 73 | திரு.க.மார்க்கண்டு | 1000.00 |
| 74 | திரு.க.ஜீவதாஸ் | 1000.00 |
| 75 | திரு.S.நாகேந்தரம் | 2000.00 |
| 76 | திருமத.ச.இராஜேஸ்வரி | 2000.00 |
| 77 | திருமதி.வ.கந்தையா | 2000.00 |
| 78 | திருமதி.சி.கணேசமூர்த்தி | 1000.00 |
| 79 | திருமதி.ஞானம் ரீச்சர் | 2000.00 |
| 80 | திருமதி.V.ஞானேஸ்வரி | 2000.00 |
| 81 | திரு.செ.நம்பியாரூரன் | 1000.00 |
| 82 | திரு.நா.விக்னேஸ்வரன் | 1000.00 |

# யா/சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி
# நிதியுதவி வழங்கியோர் விபரம்

| இல | வரவு விபரம் | காசு |
|---|---|---|
| 83 | திரு.p.பாலச்சந்திரன் | 25,000.00 |
| 84 | திருமதி.ஸ்ரீ.பத்மாவதி | 1000.00 |
| 85 | திரு.பிரான்ஸிஸ்யோப்பையா | 1000.00 |
| 86 | திரு.மு.செல்லையா | 500.00 |
| 87 | திருமதி.சுமங்கலி குமாரரூபன் | 500.00 |
| 88 | திருமதி.ஞா.செல்வராசா | 500.00 |
| 89 | திரு.க.நாகலிங்கம் | 1000.00 |
| 90 | திருமதி.சு.பாலகுமார் | 1500.00 |
| 91 | துர்க்காதேவி தேஸ்தானம் | 5000.00 |
| 92 | திரு.V.K.நடராசா | 500.00 |
| 93 | திரு.இ.உதயகுமார் | 500.00 |
| 94 | திரு.ந.முருகதாஸ் | 500.00 |
| 95 | திருமதி.சு.பாலகுமார் | 300.00 |
| 96 | திரு.சு.முருகமூர்த்தி | 300.00 |
| 97 | திருமதி.ரோ.தயானந்தன் | 500.00 |
| 98 | சித்திவிநாயகர் கடை | 1000.00 |
| 99 | திரு.செ.கந்தசாமி | 500.00 |
| 100 | திரு.இ.செந்தூரன் | 500.00 |
| 101 | திரு.நா.செல்வராசா | 500.00 |
| 102 | திருமதி.சு.நடேசராணி | 500.00 |
| 103 | திருமதி.கா.பாக்கியலட்சுமி | 1000.00 |
| 104 | திருமதி.க.கந்தையா | 2000.00 |
| 105 | திரு.இ.வரதராசா | 5000.00 |
| 106 | திரு.சி.சிவானந்தராசா | 1000.00 |
| 107 | திரு.சி.பாலச்சந்திரன் | 1000.00 |
| 108 | திருமதி.இ.பத்மராணி | 1000.00 |
| 109 | திரு.சு.சோமபாலன் | 1000.00 |
| 110 | திரு.இ.கணேசமூர்த்தி | 1000.00 |
| 111 | திரு.தா.நிகேதன் | 2000.00 |
| 112 | திரு.ம.முருகையா | 15,000.00 |
| 113 | திரு.புலேந்திரன் | 50,000.00 |